**ஜி.ஆர். தங்கமாளிகை மகாலட்சுமி விவேகானந்தா வித்யாலயா**

**மணலிபுதுநகர், சென்னை – 600 103**

# ஹோமம் அறிக்கை (2023 – 2024) (Homam Report)

**“ சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம்”**

மணலிபுதுநகரிலுள்ள ஜி.ஆர். தங்கமாளிகை மகாலட்சுமி விவேகானந்தா பள்ளியில் 2023 – 2024 ஆம் கல்வியாண்டின் முதல் நிகழ்ச்சியாக ஹோமம் ஜுன் மாதம் 7 – ஆம் நாள் புதன்கிழமை அன்று காலை 7.00 மணியளவில் இனிதே தொடங்கியது.

சிறப்பு வாய்ந்த இந்நாளில் விவேகானந்தா கல்விக்கழகத்தின் துணைச்செயலாளர் உயர்திரு. இராமமூர்த்தி அவர்களும், அவரின் துணைவியாரும் கலந்துக்கொண்டனர். கணபதி ஹோமம், நவகிரக ஹோமம், சரஸ்வதி பூஜை, ஹயக்கீரவர் பூஜை போன்றவைகள் திரு. நாகராஜ் சாஸ்திரி அவர்களால் சிறப்பாக நடைபெற்றன. மாணவர்கள் சிறந்தவர்களாக திகழவும், புத்திக்கூர்மை உள்ளவர்களாக விளங்கவும் ஹோமம் பூஜை சிறப்பாக நடைபெற்றன.

பள்ளி துணைத்தாளாளர் திரு. மாதவன் அவர்கள் , பள்ளி முதல்வர் திரு. பொன்பாண்டியன் அவர்கள், பள்ளி துணைமுதல்வர் திருமதி. சாய்லட்சுமி அவர்கள் , பள்ளி ஆசிரியர்கள் மற்றும் பத்தாம் வகுப்பு, பன்னிரண்டாம் வகுப்பு மாணவர்கள் ஹோமத்தில் கலந்து கொண்டு இறைவனின் அருளைப் பெற வேண்டினர். பிறகு மாணவர்களுக்கு பிரசாதம் வழங்கினர். பூஜை இனிதே நிறைவடைந்தது.

